வெளியீடு : 25-7-2026

Issued: 25-7-2026

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினேழாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SEVENTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, மே 12, 2026—தொகுதி 1-எண் 2

Tuesday the 12th May 2026—Volume 1-No.2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ.3.00] **[Price Rs.3.00**

LATIVE ASSEMBLY
E TRIUMPHS

12–5–2026

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. பேரவைத் தலைவர் தேர்தல்	19 - 21
2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்	21 - 22
3. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும் நன்றியுரைகளும்—	22 - 68
திரு. செ. ராஜேஷ் குமார்	22 - 23
திரு. எஸ். காமராஜ்	23 - 25
திரு. ஆர். செல்லசுவாமி	25 - 26
திரு. வன்னி அரசு	26 - 28
திரு. SSB. சையத் பாரூக் பாஷா	28
திரு. ட்டி.. இராமச்சந்திரன்	29 - 31
திரு. தி.மு. இராசேந்திரன்	31 - 33
திரு. மு. தமிமுன் அன்சாரி	33
திரு. எம். போஜராஜன்	34
திரு. K. நித்தியானந்தன்	34 - 35
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	35 - 36
முனைவர் சௌமியா அன்புமணி	36 - 39
* திருமதி பிரேமலதா விஜயகாந்த்	39 -41
திரு. எடப்பாடி K. பழனிசாமி	41 - 42
திரு. எஸ்.பி. வேலுமணி	43 - 44
திரு. உதயநிதி ஸ்டாலின்	44 - 51
* மாண்புமிகு திரு. C. ஜோசப் விஜய்	51 - 53
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்	54
மாண்புமிகு பேரவைத் தலைவர்	54 - 68

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 29, திருவள்ளுவர் ஆண்டு–2057

2026 மே 12, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் **திரு. மு.வீ. கருப்பையா** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. மு.வீ. கருப்பையா):

"கொடை அளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. மு.வீ. கருப்பையா): *பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178–வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.*

சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4–ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

[தற்காலிகப் பேரவைத் தலைவர்] [2026 மே 12

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

முன்மொழிந்தவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

வழிமொழிந்தவர் : மாண்புமிகு அமைச்சர் திரு. N. ஆனந்த் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால், மாண்புமிகு திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள், இப்பேரவையின் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பேரவையால் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய பணியை நிறைவு செய்கிறேன்.

அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களை மரபுப்படி அவரது இருக்கையில் அமரச் செய்தல் வேண்டும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அழைத்துவந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2026 மே 12]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும் அழைத்துவந்து, அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதி 8, உள்விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:*

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. மு. ரவிசங்கர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

முன்மொழிந்தவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

வழிமொழிந்தவர் : மாண்புமிகு அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-35

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. மு. ரவிசங்கர் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால், மாண்புமிகு திரு. மு. ரவிசங்கர் அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும் நன்றியுரைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துரைகள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர்களே, 17-வது சட்டமன்றத்தின் புதிய பேரவைத் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியேற்றுள்ள திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களின் ஜனநாயக கொள்கைகளின் வழியிலும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் அனுபவமும், அமைதியான அணுகுமுறையும், அனைத்து தரப்பினரையும் அரவணைக்கும் ஜனநாயகப் பண்பும் கொண்டவர் என்ற மதிப்பைத் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். சட்டமன்றத்தின் மாண்பையும், மரபையும் காக்கும் உயரிய பொறுப்பு இன்று தங்களது தோள்களில் ஏற்றப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சாசனத்தின் உயரிய மதிப்புகளான மதசார்பின்மை, ஜனநாயகம், சமத்துவம், கருத்துரிமை, சமூக நீதி மற்றும் நீதி ஆகிய அடிப்படை கொள்கைகளுக்கு முழு மரியாதை அளிக்கும்வகையில் தங்களது செயல்பாடுகள் அமையும் என நாங்கள் நம்புகிறோம்.

சட்டமன்றம் என்பது வெறும் விவாத அரங்கம் மட்டுமல்ல; மக்களின் உரிமைகளும், உணர்வுகளும் பிரதிபலிக்கும் ஜனநாயக கோயில் என்பதையும் இந்த அவை தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும். ஜனநாயகத்தின் உண்மையான வலிமை எதிர்குரல்களையும் மதிப்பதில் உள்ளது என்று எங்கள் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

2026 மே 12] *[திரு. செ. ராஜேஷ் குமார்]*

ராகுல் காந்தி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். அந்த ஜனநாயக உணர்வையும், அரசமைப்புச் சாசனத்தின் மாண்பையும் பாதுகாக்கும் வகையில் ஆளும் தரப்பிற்கும், எதிர்க்கட்சிகளுக்கும் சம நீதியுடன் தாங்கள் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

பெருந்தலைவர் காமராஜர் கூறியதுபோல், பதவி என்பது அதிகாரத்தின் அடையாளம் அல்ல; மக்களுக்கு செய்யும் பொறுப்பின் அடையாளம். அந்த உயர்ந்த எண்ணத்தோடு மக்கள் நலன் சார்ந்த ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெறும் சபையாக இந்த அவையை தாங்கள் வழிநடத்துவீர்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் கட்சி என்றும் ஜனநாயக மரபுகளையும், அரசமைப்புச் சாசனத்தின் உயர்வுகளையும், சமூக நீதியின் அடிப்படை கொள்கைகளையும், அவை மாண்புகளையும் காக்க முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மீண்டும் ஒருமுறை மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மதிப்பிற்குரிய திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கும் எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், அனைத்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும் மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காமராஜ் அவர்கள்.*

திரு. எஸ். காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே அனைவருக்கும் காலை வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் இன்று போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு ஐந்தாண்டு காலம் அமையப்பெற வேண்டும். வெவ்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

[திரு. எஸ். காமராஜ்] [2026 மே 12

குறிப்பாக, இளைஞர்கள் அதிகளவில் இந்தச் சட்டமன்றத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் கையிலே இருக்கிறது என்று சொல்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளைஞராக இருக்கிற காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, ஒரு சிறந்த ஆட்சியை ஏற்படுத்தித் தருவார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனால்தான் உங்களை ஆதரித்துப் பேசுகிறேன்; வாழ்த்திப் பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில கசப்பான சம்பவங்களும் நிகழ்ந்தது உண்டு. அது இன்றைக்கு இருக்கிற அரசியல் சூழல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்தான் தற்போது ஒரு திறமையான ஆட்சியைக் கொடுக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் முதல் கையெழுத்திட்ட மூன்று அறிவிப்புகளும் நிச்சயமாக தமிழ்நாட்டிற்கு உதவுகிற திட்டங்கள்.

முற்பகல் 9–40

நான், 3 நாட்களாக சென்னையில்தான் இருக்கிறேன். கடந்த காலங்களோடு ஒப்பிடும்போது சென்னை இன்றைக்கு எப்படி தெளிவாக இருக்கிறது, சுத்தமாக இருக்கிறது, சுகாதாரமாக இருக்கிறது, காவல் துறையினர் எப்படிச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதையெல்லாம் எண்ணி நான் வியந்தது உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, நீங்கள் நல்லாட்சி தர வேண்டும். ஐந்தாண்டு காலம் சிறப்பான ஆட்சியை வழங்க வேண்டும். 50 ஆண்டு காலம், 75 ஆண்டு கால ஆட்சிக்கு நீங்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டு இளைஞர்கள் உங்களை நம்புகிறார்கள். நாங்களும் உங்களை நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய முதல் அறிவிப்பிலே மக்கள் என்ன எதிர்பார்த்தார்கள் என்றால், இலவச அறிவிப்புகள் ஆயிரம் கோடி, பத்தாயிரம் கோடி ரூபாய் அளவிலான திட்டங்களை அறிவிப்பீர்கள் என்று எதிர்பார்த்தார்கள். மக்களுக்கு உதவுகிற திட்டங்களை அறிவித்த உங்களை நான் உண்மையாக பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய அரசு தொடர்வதற்கு என்னுடைய ஆதரவினை இதன்மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

2026 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். செல்லசுவாமி அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எஸ். காமராஜ்: *மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கு இருக்கிற 232 சட்டமன்ற உறுப்பினர்களும் உங்களுடைய பிள்ளைகள்மாதிரி! இங்கு இருக்கிற 232 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நீங்கள் தகப்பன்மாதிரி! இந்தச் சபைக்கு நீங்கள்தான் தலைவர்! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலம்தொட்டு இன்றுவரை நீங்கள் பல அரசியல் அனுபவங்களைக் கற்றுத் தெளிந்தவர். நீங்கள் எதையும் விவரமாக, நேர்மையாக, துல்லியமாகப் பேசக்கூடியவர். அதை நான் பத்திரிகை பேட்டிகளிலும், பொதுக் கூட்டங்களிலும் பலதடவை பார்த்திருக்கிறேன்; ரசித்திருக்கிறேன். எங்கள் அத்தனை பேரையும் உங்களுடைய பிள்ளைகளாக எண்ணி, சட்டமன்ற விதிப்படி, மரபுப்படி அனைவருக்கும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை ஆளுங்கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள், என்னைப்போன்ற ஓர் உறுப்பினர் கொண்ட parties அனைவருக்கும் கொடுக்க வேண்டிய அந்த முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள் என அத்தனைபேரும் வாழ்க! வாழ்க! ஐந்தாண்டு காலம் தொடர்க! என்று சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். செல்லசுவாமி அவர்கள்.*

திரு. ஆர். செல்லசுவாமி: *மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், பாசத்திற்குரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இன்று சபாநாயகராகப் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டிருக்கும் மாண்புமிகு திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் மாண்புமிகு திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கும் தமிழ்நாடு சட்டமன்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் அனுபவமும், அனைவரையும் அரவணைத்து*

[திரு. ஆர். செல்லசுவாமி] [2026 மே 12

நடத்தும் ஜனநாயகப் பண்பும் பெற்றிருக்கிற நீங்கள் சட்டமன்ற மாண்பையும் காக்கும் உயரிய பொறுப்பை இன்று ஏற்றிருக்கிறீர்கள். மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கும் ஜனநாயக முறைப்படி தாங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று நான் மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்று, இந்த அவையிலே எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், எந்தவித கட்சி வேறுபாடும் இல்லாமல் தாங்கள் இங்கே ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறீர்கள். நிச்சயமாக, தமிழகத்திலே அமைந்துள்ள மதசார்பற்ற ஓர் ஆட்சி, மக்களுடைய அனைத்து உரிமைகளையும் காக்கக்கூடிய வகையிலே உங்களுடைய செயல்பாடுகள் இருக்கும் என்று நான் நம்புகிறேன். அந்தவகையிலே அவைத் தலைவராக அனைவரையும் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் வழிநடத்தி, நல்ல சட்டமன்றமாக இந்தச் சட்டமன்றம் அமைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வாழ்த்தி, விடைபெறுகிறேன். அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வன்னி அரசு அவர்கள்.

திரு. வன்னி அரசு: மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும். இங்கே பதவியேற்றிருக்கின்ற, பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் முதலில் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 9–45

17–வது சட்டப் பேரவையின் புதிய சபாநாயகராக இன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மரியாதைக்குரிய ஐயா திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் திரு. ரவிசங்கர் அவர்களுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், எழுச்சித் தலைவர் தொல்காப்பியன் திருமாவளவன் அவர்களின் சார்பிலும் எம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். புரட்சியாளர் அம்பேத்கர்

2026 மே 12] [திரு. வன்னி அரசு]

அவர்கள் சொன்ன செய்தியோடு நான் இந்த அவையிலே என்னுடைய உரையை ஆரம்பிக்க விரும்புகிறேன். "சமூக ஜனநாயகம், அரசியல் ஜனநாயகம் வலிமைப் பெற்று, செழுமைப்பெற வேண்டுமானால், பெரும்பான்மை வாதத்தைவிட சிறுபான்மை மக்களுடைய குரல் வலிமைப்பெற வேண்டும்; செழுமைப்பெற வேண்டும்" என்று புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில், இந்த அவையில் ஆளுங்கட்சியினுடைய குரலைவிட, மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய எதிர்க்கட்சிகளுடைய குரல் வலிமைப்பெற வேண்டுமென்றும், அதிலிருக்கின்ற நியாயங்களை, அதிலிருக்கின்ற உணர்வுகளைப் புரிந்து அவை நடக்க வேண்டுமென்றும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடக்க வேண்டுமென்றும் நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இதே கருத்தோடு அய்யன் திருவள்ளுவன் அவர்கள்,

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் மரியாதைக்குரிய அவைத் தலைவர் அவர்கள் வேண்டுதல், வேண்டாமை இல்லாமல் இருக்க வேண்டும். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் வந்திருக்கின்றோம். எங்களுடைய குரல் என்பது தமிழ்நாட்டினுடைய குரல்; விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய குரல் என்பது தமிழ்நாட்டு உணர்வுகளினுடைய குரல்; விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய குரல் என்பது தேசிய இனத்தினுடைய குரல். அந்தக் குரல் இந்த அவையிலே பழுதுபடாமல், மறுக்கப்படாமல் எழுப்பப்பட வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று காலையில் மிக முக்கியமான ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள். வழிபாட்டு இடங்கள், பள்ளி வளாகங்கள், மக்கள் கூடும் இடங்களில் உள்ள மொத்தம் 717 மதுக்கடைகளை மூட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. வன்னி அரசு] [2026 மே 12

அதேபோல, நேற்று, முன்னாள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததன்மூலம் தமிழ்நாட்டில் மிக முக்கியமாக, ஒரு நாகரிகமான அரசியலை முன்னெடுத்திருக்கிறார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள். எதிரும் புதிருமாக இல்லாமல், தமிழ்நாட்டை வலிமைப்படுத்தக்கூடிய, சனாதன அரசியலை முன்னெடுக்கக்கூடிய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான ஒரு குரலை, முன்னெடுப்பை, ஓர் அரசியலை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் முன்னெடுக்க வேண்டும். இங்கிருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும், நாங்கள் அத்தனைபேரும் ஒருங்கிணைந்து தங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்போம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அவை சிறப்பாக நடக்க வேண்டும்; பெரும்பான்மை வாதத்தைவிட சிறுபான்மை மக்களினுடைய குரல் இங்கே வலுப்பெற வேண்டும்; தமிழ்நாட்டில் வலுப்பெற வேண்டும் என்று கேட்டு, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. SSB. சையத் பாரூக் பாஷா அவர்கள்.

திரு. SSB. சையத் பாரூக் பாஷா: பசித்த நாவும், வணங்குவதற்கு தலையும், சிந்திக்க மூளையும் படைத்தவல்ல இறைவனுக்கு, புகழனைத்தும் உரித்தாக்கி, இன்றைக்கு என்னுடைய வாழ்த்துரையை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் என்னை அமர வைத்து, அழகு பார்க்கும் வாணியம்பாடி சட்டப் பேரவை அன்பு வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய அரசியல் ஆசான் ஐயா பேராசிரியர் பெருந்தகை கே.எம். காதர் மொகிதீன் சாஹிப் அவர்களுக்கும், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று நடைபெற்ற பேரவைத் தலைவர் தேர்தலில், ஒருமனதோடு இச்சபையின் நாயகரைத் தேர்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றியையும், வாழ்த்துகளையும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாகத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2026 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

முற்பகல் 9–50

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பதினேழாவது சட்டமன்றப் பேரவையில் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் புரட்சிகரமான வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மக்களாட்சித் தத்துவத்தில் ஜனநாயகத்தின் இதயமாகச் சட்டமன்றம் திகழ்கிறது. ஜனநாயகத்தின் நான்கு தூண்களில், முதல் முக்கிய தூணாக சட்டமன்றம் விளங்குகிறது. சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல், சார்பு நிலையோடு செயல்படாமல், சபாநாயகர் அவர்கள் நடுநிலையோடு செயல்பட வேண்டும். விவாதங்களிலே பங்கேற்க, ஆளுங்கட்சிக்கு வழங்குகின்ற நேரத்தைவிட, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கூடுதலாக நேரத்தைக் கொடுத்து சபாநாயகர் அவர்கள் நடுநிலையோடு செயல்பட வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இரண்டு முறை இந்த அவையில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். நீண்ட, நெடிய அரசியல் அனுபவம் வாய்ந்தவர். ஆகவே, வருங்காலங்களில் தமிழ்நாட்டினுடைய மாநில உரிமைகள், சமூக நீதி, மதசார்பின்மை ஆகியவற்றை இந்த அவையில் உயர்த்திப் பிடிக்க வேண்டும். இன்றைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயல்பாடுகள் ஒட்டுமொத்த நாடே பாராட்டும் வகையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று எதிரும் புதிருமாக, பேசாமல் இருந்த அந்தக் கட்டமைப்பை உடைத்து, தமிழ்நாட்டினுடைய பாரம்பரிய பண்பாட்டை மாண்புமிகு

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [*2026 மே 12*

முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு பாதுகாத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் வெற்றிபெற்ற பிறகு, அன்றைக்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றிபெற்ற பிறகு, பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான அண்ணன் திரு. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்தது; (மேசையைத் தட்டும் ஒலி) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. வைகோ அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றது; திராவிடர் கழகத்தினுடைய தலைவர் ஆசிரியர் திரு. கி. வீரமணி அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றது; பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்களைச் சந்தித்தது; நாம் தமிழர் கட்சியினுடைய தலைவர் சீமான் அவர்களையும், இடதுசாரி கட்சித் தலைவர்கள் தோழர் வீரபாண்டியன், தோழர் சண்முகம், விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் திருமா ஆகியோரையும் சந்தித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து பெற்றிருப்பதன்மூலம் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதே மேடையில் மூன்று கோப்புகளில் கையெழுத்திட்டு, ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் மகிழ்ச்சியிலே ஆழ்த்தியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, இன்றைக்கு பெண்கள் மற்றும் குழந்தைகளுடைய பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' அமைக்கப்படும்; இளைய சமுதாயத்தினர் இன்றைக்கு போதையிலே புரையோடிக்கொண்டிருக்கிறார்கள், அந்த இளைய சமுதாயத்தை மீட்டெடுக்கும் வகையிலே மாவட்ட வாரியாக 'போதைப்பொருள் தடுப்புப் படை' உருவாக்கப்படும்; '200 யூனிட் வரை இலவச மின்சாரம்' என கோப்புகளில் கையெழுத்திட்டு ஆரம்பமே அமர்க்களப்படுத்தியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தமிழ்நாட்டு மக்கள் காத்திருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டு, மீண்டும் ஒரு முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளையும்,

2026 மே 12] *[திரு. ட்டி. இராமச்சந்திரன்]*

பாராட்டுகளையும் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.மு. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. தி.மு. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துவதற்கு கிடைத்த வாய்ப்பிற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் வார்ப்பிக்கப்பட்ட அவரது தளகர்த்தர்களில் ஒருவர் என்பதை திராவிட இயக்க அரசியலில் மாணவராக வளர்ந்தபோது நான் அறிந்திருக்கிறேன். அவரது சட்டமன்ற உரைகள் பலவற்றையும் அப்போது படிக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். இந்தச் சபையை அலங்கரிக்கின்றவர்களில் பலர் இளைஞர்களாக இருந்தாலும், சட்டமன்றத்தை நடத்துவதற்கு முதிய அனுபவமும், அதற்கேற்ற பக்குவமும் வேண்டுமென்கிற அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவரைத் தேர்வு செய்திருக்கின்ற தமிழ்நாட்டின் புதிய அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அப்படியே ஏற்றுக்கொண்ட பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும், சக எதிர்க்கட்சிகளும் பாராட்டுக்குரியவைதான்.*

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'யாகாவார் ஆயினும் நாகாக்க' என்று வள்ளுவர் சொல்கிற அதேநேரத்தில்,

> *'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்*
> *கெடுப்பார் இலானுங் கெடும்'*

என்பதையும் அவரே குறிப்பிடுகிறார். நமது அரசமைப்புச் சட்டத்தின் விசித்திரங்களில் ஒன்று, ஒரு கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவரைத்தான் நடுநிலை தவறாமல்

[திரு. தி.மு. இராசேந்திரன்] [2026 மே 12

நடந்துகொள்ளுங்கள் என்று அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர வைப்பதாகும். அதனை அரசமைப்புச் சட்டத்தினுடைய விசித்திரமாகக் கருதாமல், அன்றைக்கு அதை எழுதியவர்கள் நல்ல நோக்கத்தில்தான் எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில்கொண்டு,எதிர்க்கட்சியில்இருக்கின்றவர்களெல்லாம் எடுத்துப் பேசுவதை, சுட்டிக்காட்டுகின்ற குறைகளை இடித்துரைப்பதாகக் கருதிவிடாமல், உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குத்தான் அதைச் சொல்கிறோம் என்கிற அடிப்படையில் ஆளுங்கட்சியினர் ஏற்றுக்கொள்ளத்தக்க அந்தப் பக்குவத்தை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நல்ல முதிர்ச்சியோடு அந்தக் கடமையைச் செய்வீர்கள் என்பதை எங்களால் உணர முடிகிறது. அதேநேரத்தில், இளைஞர்களுக்கான வாய்ப்பையும் விட்டுக் கொடுக்க முடியாது என்கிற அந்த அடிப்படையில், இளைய வயதுடைய ஒருவரை பேரவைத் துணைத் தலைவராக அமர்த்தி, முதியவர்களையும், இளைஞர்களையும் ஒருசேர நீங்கள் உருவாக்கியிருப்பது எங்களுக்கு நம்பிக்கையைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கே குறிப்பிட்டதைப்போல, மக்களின் குரலை, தமிழினத்தின் குரலை, எங்களுக்கென்று பேசுவதற்கு நாதி இல்லையா என்று கேட்டுக் கொண்டிருக்கின்றவர்களின் குரலை எதிரொலிக்கின்ற எங்களைப்போன்ற அரசியல் கட்சிகளுக்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்து, அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கான உரிய வாய்ப்பினை நீங்கள்தான் மனது வைத்து உருவாக்கித் தர வேண்டும்.

'எதிர்க்கட்சி என்பது சோறு இல்லாத அகப்பையை' போன்றது; 'ஆளுங்கட்சி என்பது சோறு நிறைந்திருக்கின்ற அகப்பையை' போன்றது. எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் வெறும் அகப்பையை எப்படி வேண்டுமானாலும் சுழற்றுவோம். ஆளுங்கட்சி வரிசையில் இருக்கின்றவர்கள், சோறு அகப்பையில் இருப்பதால் பக்குவமாகத்தான் சுழற்ற வேண்டியிருக்கும். ஆகவே, அதற்கேற்ற முறையில் எங்களுக்கான வாய்ப்பினை நீங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய நாடாளுமன்றத்தில் தமிழனின் குரலாக எதிரொலித்த தலைவர் திரு. வைகோ அவர்களின் சார்பில், இயக்கத்தின்

2026 மே 12] [திரு. தி.மு. இராசேந்திரன்]

இளைய தலைவர், தமிழ்நாடு அரசியல் களம் கவனிக்கின்ற திரு. துரை வைகோ, எம்.பி. அவர்கள் சார்பில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உளமார, மனதார வாழ்த்துகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. மு. தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உங்கள் இருவருக்கும் மனிதநேய ஜனநாயகக் கட்சியின் சார்பில் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களைப் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர வைத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'இருளை பழிப்பதைவிட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வையுங்கள்' என்றார் அரசியல் மேதை அரிஸ்டாட்டில். நீங்கள் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கும் இடத்தில் இருக்கிறீர்கள். அந்த மெழுகுவர்த்தி இந்த அவையில் நாகரிக அரசியலின் வெளிச்சத்தை ஏற்றி வைக்கட்டும் என்று மீண்டும் வாழ்த்துகிறேன். சட்டமன்ற ஜனநாயகத்தை விவாதங்கள்தான் அழகுபடுத்துகின்றன. இதில் எண்ணிக்கைகளின் வலிமை எவ்வளவு முக்கியமோ, அதுபோல் எண்ணங்களின் வலிமையும் மிக முக்கியம். எனவே, சிறிய கட்சி, பெரிய கட்சி என்று பாகுபாடு காட்டாமல், உறுப்பினரின் நோக்கம், அவர் பேசவரும் கருத்தியல், அவர் எடுத்தாள விரும்பும் முழக்கங்கள் ஆகியவற்றைக் கவனத்திலேகொண்டு எல்லோருக்கும் நேரம் ஒதுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சமூக நீதி, சமூக நல்லிணக்கம், சமத்துவ ஜனநாயகம் போன்றவை ஓங்கி ஒலிக்கவும், ஜனநாயகத்தின் முதிர்ச்சியை வெளிக்காட்டவும் உங்களின் தலைமையிலே இந்த அவையின் செயல்பாடுகள் அமையட்டும் என்று கூறி, மீண்டும் வாழ்த்தி அமர்கிறேன். நன்றி, வாழ்த்துகள்.

[2026 மே 12

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். போஜராஜன் அவர்கள்.

திரு. எம். போஜராஜன்: மரியாதைக்குரிய முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் நான் சார்ந்த பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம், பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அனுபவம்மிக்க, மரியாதைக்குரிய திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கும் எங்களது கட்சியின் சார்பாகவும், எனது தனிப்பட்ட முறையிலும் வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லதோர் ஆட்சி அமைய பாரதப் பிரதமர் திரு. மோடிஜி அவர்களுடைய தலைமையில் ஓர் இணக்கமான மாநில அரசாக இருந்து, மக்களுடைய நலன்தான், தமிழ்நாட்டினுடைய நலன்தான் முக்கியம் என்ற எண்ணத்தோடு நாம் பயணிப்போம் என்ற நல்லதொரு செய்தியைக் கூறிக்கொள்கிறேன். நான் சார்ந்த உதகை எப்படி குளுகுளு என்று இருக்கின்றதோ, அதேபோன்று கூடான விவாதங்கள் இருந்தாலும், நமது உள்ளங்களிலே குளுகுளு நிலைமை, நல்லதொரு உணர்வு அதாவது தேசத்தின் முன்னேற்றம்தான் முதன்மையாக இருக்க வேண்டும் என்பதை மனதிலேகொண்டு நாம் செயல்படுவோம் என்று கூறி, மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. நித்தியானந்தன் அவர்கள்.

திரு. K. நித்தியானந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று போட்டியில்லாமல் தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நான் சார்ந்திருக்கக்கூடிய

2026 மே 12] [திரு. K. நித்தியானந்தன்]

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக, பொதுச் செயலாளர் அண்ணன் ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பானதொரு ஆட்சியைத் தர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவரும் கூறியதைபோன்று, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று இல்லாமல், இந்தச் சபையை நடுநிலையோடு நடத்துவதற்கு தாங்கள் முயற்சி செய்ய வேண்டும். மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான சபை நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் தங்கள் வாயிலாக இங்கே வைக்கிறேன். தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் எவ்வாறு செயல்படுகின்றார் என்பதைப் பார்க்க வேண்டும் என்ற உரிமை, கடமை அந்த மக்களுக்கு இருக்கின்றது. அதையும் தாங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சபையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்து, இந்த வாய்ப்பைக் கொடுத்த பொள்ளாச்சி மக்களுக்கும், எங்களுக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்த முன்னாள் முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி கூறி, மீண்டும் ஒருமுறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று, 17-வது சட்டமன்றப் பேரவையினுடைய சபாநாயகராக, பேரவைத் தலைவராக நீங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள். தங்களை பேரவைத் தலைவர் இருக்கையில் அமர வைப்பதற்காக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கையைப் பிடித்து அழைத்துச்சென்று இருக்கையில் அமர வைத்தார்கள். இது தொடர்ச்சியாக நாம் பின்பற்றி வரக்கூடிய ஒரு மரபாக

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2026 மே 12

இருக்கின்றது. ஆனால், அந்த மரபு ஒரு வலிமையான கருத்தை அனைவருக்கும் எடுத்துக்காட்டுகிறது.

முற்பகல் 10-05

பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு நீங்கள் ஒரு கட்சியின் சார்பாக இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள். ஆனால், பேரவைத் தலைவராக நீங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் நடுநிலையாக, நடுநிலை தவறாமல் நீங்கள் செயல்பட வேண்டும் என்றுதான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் உங்கள் கைகளைப் பிடித்து இருக்கையிலே அமர வைத்த அந்த செயலில் வெளிப்படுகிறது. நீங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே உறுப்பினராக இருந்திருக்கின்றீர்கள். அதே அவையிலே நானும் உறுப்பினராக இருந்திருக்கின்றேன். எப்போதும் நீங்கள் முகமலர்ச்சியுடன் அனைவருடனும் இனிமையாகப் பழகக்கூடிய சுபாவம் உடையவர் என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். அதே இனிமையுடன் இந்தப் பதினேழாவது சட்டமன்றப் பேரவையை நீங்கள் சிறப்பாக நடத்துவீர்கள். உங்களுக்கு உறுதுணையாக மாண்புமிகு துணை சபாநாயகர் அருமை சகோதரர் திரு. ரவிசங்கர் அவர்களும் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. உங்களை இந்தப் பொறுப்புக்கு பரிந்துரைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செளமியா அன்புமணி அவர்கள்.

முனைவர் செளமியா அன்புமணி: அனைவருக்கும் வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்

2026 மே 12] [முனைவர் சௌமியா அன்புமணி]

அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், மாண்புமிகு அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு பேரவைத் தலைவராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தங்கள் இருவருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் எங்களுடைய மூத்த சகோதரர் பழுத்த அரசியல்வாதி, சமூக நீதியின் பின்னணியில் வளர்ந்தவர், சமூக நீதிக்காகத் தொடர்ந்து பாடுபட்டுக்கொண்டிருக்கும் எங்களுடைய அன்பு சகோதரர் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் ஐயா அவர்களுக்கும், சமூக நீதிக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் சகோதரர் திரு. ரவிசங்கர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயக முறைப்படி இந்தச் சட்டமன்றம் நன்றாக நடைபெறும் என்பதில் எங்களுக்கு எந்த ஐயமும் இல்லை. ஏனென்றால், சமூக நீதியின் பின்னணியில் வளர்ந்தவர்கள் தாங்கள். கண்டிப்பாக எல்லோருக்கும் சம வாய்ப்பளித்து, ஜனநாயக முறைப்படி இந்தச் சட்டமன்றம் நடைபெறும். உங்கள் இருவரின் வழிகாட்டுதல்படி நேர்மையாகவும் இந்தச் சட்டமன்றம் நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றுவது எங்களுக்கு மிகுந்த பெருமையாகவும், அதை எங்களுடைய பாக்கியமாகவும், வரமாகவும் நாங்கள் கருதுகிறோம். மூதறிஞர் ராஜாஜி, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி ஜெயலலிதா அம்மையார் ஆகியோர் அலங்கரித்த இந்தப் பெருமைமிகு சட்டமன்றப் பேரவையில் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர் என்னுடைய தாய்வழி தாத்தா திருத்தணியை மீட்ட தளபதி திரு. கே. விநாயகம் அவர்கள். திருத்தணி ஆந்திரப் பிரதேசத்துடன் சென்றபோது அதைப் போராடி

[முனைவர் சௌமியா அன்புமணி] [2026 மே 12 மீட்டுக் கொடுத்த மொழிப் போராட்ட தியாகி அவர். அவர் மூன்று முறை இந்தச் சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். அவருக்கும், அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களுடனான சட்டமன்ற விவாதங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

முற்பகல் 10–10

ஒரு முறை "Hon'ble Chief Minister, your days are numbered" என்று என்னுடைய தாத்தா சிம்மக்குரலோன் தளபதி கே. விநாயகம் அவர்கள் முழங்கி இருக்கின்றார்கள். அந்தச் சமயம் அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் "Hon'ble Member, my steps are measured" என்று அமைதியாகப் பதிலளித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்ற பெருமைமிகு சட்டமன்றம் நம் தமிழ்நாடு சட்டமன்றம். அப்படிப்பட்ட ஆரோக்கியமான விவாதங்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தில்தான் நடந்திருக்கின்றன. அதுபோன்ற ஆரோக்கியமான விவாதங்களும், அரசியல் நேர்மையுடனும் நடைபெற்ற சட்டமன்றம் தமிழ்நாடு சட்டமன்றம். அப்படிப்பட்ட சட்டமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்களை முன்னெடுக்கவும், மக்கள் நலன் சார்ந்த விஷயங்களைப் பேசி நல்ல முடிவெடுக்கவும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த எங்களுக்கு அதிகமான நல்வாய்ப்புகளை வாரி வழங்குமாறு தங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பணியாளர்களான நாங்கள் இந்த மாண்புமிகு அவையில் பேசுவதற்கும், பணியாற்றுவதற்கும் எங்களுக்கு வாய்ப்பளித்த எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர், சமூக நீதிப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், முன்னாள் இந்திய சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எங்களுடைய நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக இந்தப் பெருமைமிகு சட்டப் பேரவையில் சமூக நீதி, பெண்கள் பாதுகாப்பு, மது ஒழிப்பு, போதை ஒழிப்பு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, வேளாண் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, நீடித்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி மற்றும் மருத்துவம், தமிழுக்கு முக்கியத்துவம்,

2026 மே 12] [*முனைவர் சௌமியா அன்புமணி*]

நீர் மேலாண்மைப் பற்றிய ஆக்கபூர்வமான விவாதங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையேற்று நடத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். நான் முன்பே கேட்டுக்கொண்டதுபோல், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு அதிகமான வாய்ப்புகளை அள்ளித் தருமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன். நிச்சயம், தாங்கள் நல்வாய்ப்புகளைத் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு நன்றியோடு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்கள்.*

***திருமதி பிரேமலதா விஜயகாந்த்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இன்று, அவைத் தலைவராக* unopposed*–ஆக வெற்றி பெற்றிருக்கும் மாண்புமிகு அண்ணன் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கும், இந்த அவையிலே வீற்றிருக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் முதலமைச்சர்களாக இருந்த அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், அண்ணன் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இந்த அவை ஒரு மாண்புமிகு அவை. தமிழ்நாட்டின் வரலாற்றைக் கூறுகின்ற மாண்புமிகு இந்த அவையில் முன்னாள் முதலமைச்சர்கள் மிகச் சிறந்த முறையில் ஆட்சி செய்ததற்கான அடையாளம், இங்கு நம்மைச் சுற்றியிருக்கின்ற அவர்களின் புகைப்படங்களே அதற்கான சாட்சி. அந்த மாண்பும், மரபும் இம்மியளவும் மாறாமல் மாண்புமிகு அண்ணன் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் அவைத் தலைவராக நடுநிலையோடு, தராசுபோல இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் சரிசமமான வாய்ப்பை, ஆணாக இருந்தாலும், இந்த அவைக்கு அன்னையாக இருந்து அனைவருக்கும் சமமான வாய்ப்பைத் தர வேண்டுமென்று இந்தப் புனிதமான அவையிலே அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைய மாண்புமிகு முதல்வர், அன்புத் தம்பி திரு. C. ஜோசப் விஜய் அவர்களுக்கு திரையுலகில் அண்ணனாக இருந்த கேப்டன்

[திருமதி பிரேமலதா விஜயகாந்த்] [2026 மே 12

அவர்கள், இதே அவையில் எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்பட்டபோதே அவையில் நடக்கின்ற அத்தனை விஷயங்களும் தமிழகம் முழுவதும் தெரிய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதனால், அந்த விஷயத்திலும் நடுநிலையோடு இருந்து, ஆளுங்கட்சி side மட்டும் camera focus செய்யாமல், சட்டமன்றத்தில் நடைபெறும் அத்தனை நிகழ்வுகளையும் நேரலையில் தமிழக மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் சரிசமமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

அதுமட்டுமல்ல, தமிழ்நாடும், தமிழும் என்றும் சிறப்புமிக்கதாக இருக்க வேண்டும். எனவே, இனிமேல் தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் 'தமிழ்த்தாய்' வாழ்த்திற்கு முதலிடத்தைக் கொடுத்து, பிறகு மற்ற மொழிகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதை இந்த நேரத்தில், இந்த அவையில் நான் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'எதிர்க்கட்சிகள் எதிரிக்கட்சிகள்' அல்ல; அனைத்தும் தோழமைக் கட்சிகள்தான் என்பதை நிரூபிக்கும்வகையில், மிகச் சிறப்பானவகையில், நேற்றையதினம் அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் நேரடியாகச் சென்று சந்தித்த மாண்புமிகு முதல்வர், அன்புத் தம்பி திரு. விஜய் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவை, தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் நீதியையும், நேர்மையையும் நிலைநாட்ட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாளை நடைபெறவிருக்கும் நம்பிக்கைக் கோரும் தீர்மானத்தில் மாண்புமிகு முதலமைச்சர், அன்புத் தம்பி திரு. விஜய் அவர்கள் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) நம் மாநிலத்திற்கு மிகச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று, மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அண்ணன் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

2026 மே 12] [திருமதி பிரேமலதா விஜயகாந்த்]

அவர்களுக்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக, இந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவராக மிகச் சிறப்பாக தன்னுடைய கருத்தை தைரியமாக எடுத்துரைத்த என் அன்புக் கணவர் கேப்டன் அவர்களுடைய ஆசிர்வாதத்துடன் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் முதலில் வணங்குகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில், புனிதமான இருக்கையில் அமர்ந்திருக்கிற மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இப்பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடக் கூடாது என்ற மரபு இருக்கின்ற காரணத்தினால், நான் பெயர்களைக் குறிப்பிடவில்லை. எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவருக்கும் என்னுடைய இதயபூர்வமான நல்வாழ்த்துகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல், இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் சாயாமல், நடுநிலை வகிக்கும் தராசு போன்று என்றும் செயல்பட வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தளவுக்கு எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கின்றீர்களோ, அந்தளவுக்கு உங்களுடைய அரசு சிறப்பாகச் செயல்படும். ஏனென்றால், மக்களுடைய

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2026 மே 12

பிரச்சினைகளை இந்த அவையில் எடுத்துவைப்பது எதிர்க்கட்சிகளினுடைய கடமையாகும். எதிர்க்கட்சிகள் தங்கள் கடமையைச் சிறப்பாகச் செய்வதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் முழுமையான நேரத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள், ஏற்கெனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். சட்டமன்றப் பேரவை விதிகள் அனைத்தும் நன்றாகத் தெரிந்தவர்; சிறப்பான முறையில் பேசக்கூடியவர்; சிறப்பான முறையில் அவையை நடத்தக்கூடிய திறமை மிக்கவர். ஆக, அற்புதமான, நல்ல நிகழ்வுகளை நிகழ்த்தக்கூடிய இப்படியொரு வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இந்தப் புனிதமான ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றவர்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்ல, அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் பேரவையில் பேசுவதற்குப் போதுமான நேரத்தை ஒதுக்கிக் கொடுத்து, மக்களுடைய பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்கு நல்ல வாய்ப்பினைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் தேர்தலில் வெற்றிபெற்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் கையை உயர்த்துகிறீர்கள். பேசுங்கள்.

2026 மே 12]

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தெய்வங்களை வணங்குகிறேன். 17-வது சட்டமன்றப் பேரவைக்குப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று, பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலும் பணியாற்றியவர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில், எம்.ஜி.ஆர். இளைஞரணிச் செயலாளராக சிறப்பான முறையில் பணியாற்றியவர். மாண்புமிகு புரட்சித் தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி ஆகியோரின் அளப்பரிய அன்பைப் பெற்றவர். மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலும் வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையில் சிறந்த முறையில் பணியாற்றியவர். அ.இ.அ.தி.மு.க.-வில் பல்வேறு பொறுப்புகளில் சிறந்த முறையில் பணியாற்றியவர். தற்போது ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று, 17-வது சட்டமன்றப் பேரவையில், பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீங்கள், பழகுவதற்கு இனிமையானவர், பண்பானவர், எளிமையானவர். இந்தப் பேரவையில் பேரவைத் தலைவராக நடுநிலையோடு பணியாற்றிய மாண்புமிகு அண்ணன் டாக்டர் கா. காளிமுத்து, மாண்புமிகு திரு. ஜெயக்குமார், மாண்புமிகு திரு. ப. தனபால் ஆகியோர் வரிசையில் நீங்கள் இடம்பெற வேண்டும். இந்த அவையின் மரபும், மாட்சிமையும், மதிப்பும் காக்கப்பட வேண்டும். நீங்கள் நடுநிலை நழுவா நாயகராக விளங்க வேண்டும் என்று கூறி, இந்த அவையைத் தாங்கள் சிறப்புற வழிநடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2026 மே 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய துறையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்காலிக சபாநாயகராகப் பொறுப்பேற்று சிறப்பான முறையில் பணியாற்றிய திரு. கருப்பையா அவர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று, ஒரு சிறப்பான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் மதுக்கடைகள் இருக்கக் கூடாது என்ற அற்புதமான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, 17-வது சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக எனது முதல் உரை இது. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், தமிழ்நாட்டினுடைய தலைமகன் பேரறிஞர் அண்ணா, நவீன தமிழ்நாட்டினுடைய சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே வழிகாட்டிய, திராவிட மாடல் ஆட்சியைத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் (மேசையைத் தட்டும் ஒலி) என எங்களுடைய தலைவர்களையெல்லாம் வணங்கி, என்னுடைய இந்த உரையைத் துவங்குகின்றேன்.

என்னை இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்து, இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய என்னுடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, எங்கள் தலைவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணிக்கு 1 கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகளைத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2026 மே 12] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

(மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கூட்டணி சட்டமன்ற உறுப்பினர்களுடைய வெற்றிக்காக உழைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* தோழமை இயக்கத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் என்னுடன் நின்று எனக்கு வழிகாட்டக்கூடிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், எங்களுடைய கொறடா அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், துணைக் கொறடா அண்ணன் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கும், செயலாளர் அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், பொருளாளர் அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

நேற்று, நாம் அனைவரும் சட்டமன்றத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம். அதன்பிறகு இன்றைக்கு முதல் நடவடிக்கையாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையில் மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கும் எங்களுடைய தலைவர் சார்பாகவும், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கெனவே எல்லோரும் குறிப்பிட்டதுபோன்று, நீங்கள் எப்போதுமே சிரித்த முகத்திற்கு சொந்தக்காரர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, எல்லோரிடமும் மிகுந்த அன்போடு பழகக்கூடியவர் என்றும் பலர் சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 1980 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும், 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் நீங்கள் வெற்றிபெற்று, இதே சட்டப் பேரவையில் ஒரு சிறந்த

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2026 மே 12

சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறீர்கள். எனவே, பேரவையினுடைய மரபுகளும், விதிகளும் உங்களுக்குப் புதிது கிடையாது. தற்போதும் சேர்த்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று முறையும் ஆளுங்கட்சி உறுப்பினராக நீங்கள் சட்டமன்றத்திற்குள் வந்திருக்கிறீர்கள். இந்த முறை எதிர்க்கட்சிகளையும் அரவணைத்து செயல்படுகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவராக நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். அந்தப் பொறுப்பில் மிகச் சிறப்பாக, நடுநிலையோடு செயல்படுவீர்கள் என்பதுதான் எங்கள் அத்தனை பேருடைய எதிர்பார்ப்பு. அதேபோல, எளிய பின்னணியிலிருந்து வந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய, மாண்புமிகு திரு. மு. ரவிசங்கர் அவர்கள் பேரவையினுடைய துணைத் தலைவராக உங்களுக்கு உறுதுணையாக இருந்து, இந்த அவையை வழிநடத்துவார் என்று நாங்கள் அத்தனைபேரும் நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்று எங்களுடைய தலைவர் அவர்களின் வீட்டிற்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களின் வீடுகளுக்கும் சென்று வாழ்த்துகளைப் பெற்றுவிட்டுச் சென்றார். அந்த அரசியல் நாகரிகம் இந்தப் பேரவையிலும் தொடர வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம், எதிர்பார்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே தெரிவித்திருந்தாலும், மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சட்டப் பேரவையில் 'எதிரிக்கட்சியாக' இல்லாமல், ஓர் ஆக்கபூர்வமான 'எதிர்க்கட்சியாக' நிச்சயம் செயல்படும். எங்களுடைய தலைவர் அவர்கள் தெரிவித்ததுபோன்று, திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே ஓர் ஆக்க சக்திதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக்கென்று ஒரு மிகப் பெரிய வரலாறு இருக்கிறது. இன்றைக்கு இந்தியாவில் பண்பாட்டுரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் தமிழ்நாடு சிறப்பாக முன்னேறியிருக்கிறது என்றால், இந்தப் பேரவையில் நடந்த விவாதங்கள், எடுக்கப்பட்ட முடிவுகள், இயற்றப்பட்ட சட்டங்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இவையெல்லாம்தான்

காரணம். பிற மாநிலங்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக, வழிகாட்டக்கூடியவகையில் செயல்பட்டு, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த சட்டமன்றப் பேரவை இந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. அப்படிப்பட்ட இந்தப் பேரவையில் ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான விவாதங்களுக்கு இடம் கொடுத்து, ஜனநாயக மாண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்றைக்கும் நடுநிலையோடு செயல்பட வேண்டுமென்று நாங்கள் அனைவரும் விரும்புகிறோம். இங்கே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று எதிரெதிர் வரிசையில் அமர்ந்து கொண்டிருந்தாலும், தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி என்று வரும்போது நாம் அனைவரும் ஒரே வரிசையில், முன்வரிசையில் நின்று உழைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் தமிழ்நாட்டு மக்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், விரும்புகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் அதைத்தான் விரும்புகிறது.

எங்களுடைய தலைவர் அவர்கள் கடந்த ஐந்தாண்டுகளில் அடிக்கடி சொல்கிற ஒரு வார்த்தை "இது எனது அரசு அல்ல, நமது அரசு" என்பதாகும். அதை நிரூபித்தும் காட்டியிருக்கிறார்கள். சென்ற திராவிட மாடல் அரசு வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல், வாக்களிக்காத மக்களுக்குமான அரசாகத்தான் செயல்பட்டு வந்தது. ஆகவே, இந்தப் புதிய அரசும், அனைவருக்குமான அரசாக, உங்களுக்கு வாக்களிக்காத மக்களுக்குமான அரசாக செயல்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

இந்த நேரத்திலே இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற நானும், ஒரே கல்லூரியில் படித்த *old students.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *Loyolites.*

திரு. உதயநிதி ஸ்டாலின்: ஒரே கல்லூரியில் நாம் படித்திருந்தாலும், அரசாங்கத்தை நடத்துவதில் தி.மு.க.–தான்

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2026 மே 12

senior batch. அது உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) 1967-லேயே ஆட்சிக்கு வந்தது தி.மு.க.-தான். நாங்கள்தான் seniors. அந்த அடிப்படையில் எங்களுடைய knowledge-ஐயும், experience-ஐயும் நாங்கள் share *செய்துகொள்ள தயாராக இருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ள நீங்களும் தயாராக இருங்கள். ஏனென்றால், நமக்கு எப்போதுமே தமிழ்நாடு மாநிலத்தினுடைய நலன்தான் மிக, மிக முக்கியம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் போட்டியின்றி தேர்வாகியிருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவரான நானும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் உங்களை இந்த இருக்கையில் அமர வைத்திருக்கிறோம். இன்றைக்கு உங்களுடைய கையைப் பிடித்து அழைத்து வந்து அமர வைத்திருக்கிறோம். இனி எங்கள் இரு தரப்பையும் நீங்கள்தான் கையைப் பிடித்து, அரவணைத்து, கோபப்படாமல் நீங்கள் கோபப்படமாட்டீர்கள் என்று தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைக் கோபப்படுத்துவதுமாதிரி எந்தச் செயலையும் நாங்கள் செய்யமாட்டோம். சட்டமன்ற ஜனநாயகத்தில் ஆளுங்கட்சி காதுகளாகவும், எதிர்க்கட்சி குரலாகவும் இருக்க வேண்டும். அதில்தான் இந்த அவையினுடைய பெருமை நிச்சயம் அடங்கியிருக்கிறது.

பொதுவாக, இதற்கு முந்தைய சட்டமன்றப் பேரவையை எடுத்துக்கொண்டால் ஆளுங்கட்சி வரிசையில் அதிக உறுப்பினர்களும், எதிர்க்கட்சி வரிசையில் அதைவிட குறைவான உறுப்பினர்களும் இருப்பார்கள். ஆனால், இந்த முறை கிட்டத்தட்ட ஆளுங்கட்சிக்கு இணையான எதிர்க்கட்சி வரிசை வலிமையாக அமைந்திருக்கிறது. அதுதான் இந்தப் பேரவையினுடைய இன்னொரு கூடுதல் சிறப்பு. இதன் மூலமாக தமிழ்நாட்டு மக்கள் ஒரு முக்கியமான செய்தியை நமக்கு சொல்லியிருக்கிறார்கள். அது என்னவென்றால், எதிர்க்கட்சி வரிசை மிக, மிக வலிமையாக இருந்து இந்தப் புதிய அரசை வழிநடத்த வேண்டுமென்றும், ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைக்க வேண்டுமென்றும் மக்கள் நமக்கு சொல்லியிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றமாதிரி எங்களுடைய பணிகள் நிச்சயம் இருக்கும்.

2026 மே 12] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற நிகழ்ச்சியில் நடந்த ஒரு நிகழ்வை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே, சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அந்த நிகழ்ச்சியில் 'தமிழ்த்தாய்' வாழ்த்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் மிகப் பெரிய கோபத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதை எதிர்க்கட்சிகள் எல்லோரும் விமர்சித்திருக்கிறோம். அதற்கு ஆளுங்கட்சி ஒரு விளக்கத்தையும் கொடுத்திருக்கிறது. அதை நானும் பார்த்தேன். எங்களுடைய கருத்து என்னவென்றால், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய மேற்குவங்க மாநிலத்தில் பதவியேற்பு நிகழ்ச்சியின்போது 'வந்தே மாதரம்' பாடல் பாடப்படவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் அது பாடப்பட்டிருக்கிறது. மேற்குவங்கத்தில் இன்றைக்கு யார் ஆளுநராக சென்று உட்கார்ந்திருக்கிறார்கள் என்று உங்கள் அத்தனைபேருக்கும் தெரியும். நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் இங்கு ஆளுநராக இருந்தபோது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 'தமிழ்த்தாய்' வாழ்த்துக்கு முன்பு 'தேசிய கீதம்' பாட வேண்டுமென்று பேரவையினுடைய மரபையே மாற்றச் சொன்னவர்தான் இன்றைக்கு மேற்குவங்கத்தில் ஆளுநராக இருக்கிறார்.அதை,நாங்கள்,எங்களுடையதலைவர்,அப்போதைய முதலமைச்சர் அவர்கள் உறுதியாக மறுத்தார். அதனால், 2023 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று வருடங்கள், அவர் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்த காட்சிகளையெல்லாம் நீங்களும் பார்த்திருப்பீர்கள். இதன் மூலமாக நாங்கள் சொல்ல வருவது, அடுத்து, விரைவிலேயே இந்தப் பேரவையில் ஆளுநர் உரை நிகழ்த்தவிருக்கிறார். ஆகவே, ஏற்கெனவே உங்களுடைய அரசினுடைய பதவியேற்பு விழாவில் நடந்த அந்தச் சம்பவம், அந்தத் தவறு மீண்டும் இந்தப் பேரவையில் நடப்பதற்கு நீங்கள் அனுமதிக்கக் கூடாது. நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பேரவையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி நாம் 'தமிழ்த்தாய்' வாழ்த்தை என்றைக்கும் இரண்டாவது இடத்திற்குத் தள்ளிப்போக விடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு அதற்கு அனுமதிக்கக் கூடாது என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். மிகவும் விழிப்போடு இருந்து நம்முடைய உரிமையை, மரபைப் பாதுகாக்க வேண்டுமென்று உங்களையெல்லாம் வலியுறுத்தி நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2026 மே 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டிக்கு brake எப்படியோ, ஒரு காளைக்கு மூக்கணாங்கயிறு எப்படியோ, அப்படித்தான் ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சி என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு சொல்லியிருக்கிறார். ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வழியில் ஆளுங்கட்சியினுடைய செயல்பாட்டை உற்றுநோக்கி, உங்களுடைய நிறைகளை, குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற ஓர் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக நாங்கள் நிச்சயமாகச் செயல்படுவோம். இந்த அவைக்கு புதியவர்கள், first time MLAs நிறையபேர் வந்திருக்கிறீர்கள். அதில் மிகுந்த மகிழ்ச்சி. அதேபோல, பல வருடங்களுக்குப் பிறகு நிறைய பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு இடம் பெற்றிருக்கிறீர்கள். அதில் எங்களுக்கு கூடுதல் மகிழ்ச்சி. அவர்கள் அத்தனைபேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய உரிமைக்காகவும், வளர்ச்சிக்காகவும் நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகப் பயணிப்போம். எது எப்படியானாலும் திராவிட இயக்கத்தின் அடிப்படை கொள்கைப்படி 'எல்லோர்க்கும் எல்லாம்' கிடைப்பதை உறுதி செய்கின்றவகையில், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து நாங்கள் நிச்சயமாகச் செயல்படுவோம்.

முற்பகல் 10–35

நடந்து முடிந்த தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை ஆளுங்கட்சிக்கு மக்கள் வழங்காமல் போனாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தேர்தலைச் சந்தித்து வென்ற தோழமை இயக்கங்களின் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆதரவோடு ஆட்சி அமைத்திருக்கக்கூடிய புதிய அரசிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி; உங்களுடைய பணிகள் சிறக்கட்டும்; மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2026 மே 12] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

வெல்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு! மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்! நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. C. ஜோசப் விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி' என்றார் அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆபிரகாம் லிங்கன் அவர்கள். இன்றைக்கு அமைந்துள்ள மக்களாட்சி மலர்வதற்கு, மக்களிடமுள்ள பெரும் எதிர்பார்ப்பு, அவர்களுடைய எதிர்பார்ப்புகளை இப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றைச் செயல்படுத்துவதற்கான திட்டங்களை, சட்டங்களை அமல்படுத்த வேண்டிய பொறுப்பு இப்பேரவைக்கு உள்ளது. 'அதிகமான மக்கள் அதிக நன்மைகளை இந்த ஆட்சிக் காலத்தில் பெற்றுள்ளார்கள்' என்கிற வகையில் நம்முடைய செயல்பாடுகள் அமைய வேண்டும். இங்கே அனைவரும் சமம். (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் உறுப்பினரைக்கொண்ட கட்சிகள் இங்கே இடம் பெற்றிருந்தாலும், அவர்களுடைய கருத்துகளுக்கும், அதிக எண்ணிக்கையைப் பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழக உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கும் சமமாகவே மதிப்பளிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவை ஏற்கப்பட்டு, அல்லவை நிராகரிக்கப்பட்டு, ஜனநாயகத்தின் இதயமாகவும், மூளையாகவும் இப்பேரவைச் செயல்பட வேண்டும். அதற்குரிய வகையில், பெருமைவாய்ந்த வரலாற்றுச் சிறப்புக்கொண்ட இப்பேரவையை நடத்திச் செல்லும் பண்பைப் பெற்றுள்ளவரையே தமிழக வெற்றிக் கழகம் முன்மொழிந்து, தாங்கள் இன்றைக்கு இந்த ஆசனத்தில் அமர்ந்துள்ளீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தங்களுடைய கரங்களைப் பிடித்து அழைத்துச் சென்று இந்த ஆசனத்தில் தங்களை அமர வைத்தார்கள். இந்தச் சம்பிரதாயம் எப்படி வந்தது என்று சொன்னால்

[திரு. C. ஜோசப் விஜய்] [2026 மே 12

சுவாரசியமாக இருக்கும். ஒரு பெரிய வரலாறே இச்சம்பவத்தில் உள்ளது. இங்கிலாந்திலுள்ள பாராளுமன்ற நடைமுறைகளைப் போன்றதே நம்முடைய பாராளுமன்ற நடைமுறைகளும். மன்னராட்சி இருந்த காலத்திலேயே அங்கு பாராளுமன்றம் இயங்கியுள்ளது. அக்காலத்தில் அனைத்து அதிகாரங்களையும் பெற்ற மன்னரும் இருந்தார்; பாராளுமன்றமும் இயங்கியது. அங்கு மன்னர் ஒரு பணியைச் செய்ய வேண்டுமென்று விரும்புவார்; பாராளுமன்றம் அவருடைய விருப்பத்தை பெரும்பாலும் நிராகரிக்கும். மன்னர் விரும்பிய காரியத்தை பாராளுமன்றம் நிராகரித்துவிட்டது என்கிற செய்தியை மன்னருக்கு சொல்ல வேண்டியவர் பாராளுமன்றத் தலைவர்– Speaker ஆவார். பாராளுமன்றத்தின் கருத்தை மன்னரிடம் சொல்ல வேண்டியவர் Speaker. அதற்கு துணிவு வேண்டும். சில பணிகளைச் செய்வதற்குத்தான் பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டுமே தவிர, அந்த ராஜ்ஜியத்திலுள்ள எந்த பிரஜைக்கும் மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் மன்னருக்கு உண்டு. தான் விரும்பியதைப் பாராளுமன்றம் நிராகரித்துவிட்டது என்று சொல்லும் Speaker-க்கு மரண தண்டனை விதிக்கும்படி ஆணையிடுவார். தலையை வெட்டிவிடுங்கள் என்று ஆணையிடுவார்கள். இது பலமுறை நடந்ததால், யாருமே இந்த Speaker பதவிக்கு வர விரும்பமாட்டார்கள். எனவே, புதிதாகப் பாராளுமன்றம் அமையும்போது Speaker பதவிக்கு வருவோர் அறிவிக்கப்பட்டவுடன் அவர் உடனே தலை தப்பித்தால்போதும் என்று ஓட்டம் பிடிப்பார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவரைத் தடுத்து நிறுத்தி, அவர் கைகளைப் பிடித்து இழுத்து வந்து ஆசனத்தில் அமர வைப்பார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதுதான் அந்தக் காலத்தில் இருந்து வந்த மரபு. ஜனநாயக முறை ஏற்பட்ட பிறகும் இம்மரபு தொடர்கிறது. நிச்சயமாக, தமிழக வெற்றிக் கழக உறுப்பினர்கள் அனைவருமே உங்களுக்கு உதவி கரமாகவே இருப்பார்கள் என்கிற வாக்குறுதியை இந்நேரத்தில் அளிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையின் மாண்பையும், கண்ணியத்தையும், பேரவை உறுப்பினர்களின் கண்ணியத்தையும் காக்க வேண்டிய பொறுப்பை உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

2026 மே 12] [திரு. C. ஜோசப் விஜய்]

முற்பகல் 10–40

தற்காலிகப் பேரவைத் தலைவர் பொறுப்பில் மிகச் சிறப்பாக பணியாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்களைச் சந்திக்க அவரின் அறைக்கு நேற்றைக்குச் சென்றிருந்தேன். அங்கே முந்தைய பேரவைத் தலைவர்கள் படங்களைக் கண்ணுற்றபோது, அவர்களைப் பற்றி அறிந்தபோது உண்மையிலே எனக்குப் பெருமிதம் ஏற்பட்டது. ஏனென்றால், எடுத்துக்காட்டாக விளங்கும் திரு. ஜெ. சிவசண்முகம் பிள்ளை, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ், திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களுடைய வரிசையில் மிகச் சரியான ஒருவரையே நாம் முன்மொழிந்துள்ளோம் எனப் பெருமையடைந்தேன். அதேபோன்றுதான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும். நீங்கள் இருவருமே மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து மக்கள் பணியாற்ற வேண்டுமென்கிற அவாவில் செயல்பட்டு வந்தவர்கள்.

'குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப சட்டமன்ற நடவடிக்கைகள், சீராக, செம்மையாக, அமைதியாக நடைபெறும் வகையிலும் சட்டமன்ற ஜனநாயகப் பண்புகள், நெறிமுறைகள் பேணிப் பாதுகாக்கப்படும் வகையிலும் இந்த அவைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் பெருமை சேர்ப்பீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு உண்டு. அரசியலுக்கு அப்பாற்பட்டு மனிதர்களை மதிக்கும் நல்ல பண்புகள் நிலைநாட்டப்பட வேண்டும். தமிழ்ப் பண்பாடு போற்றப்பட வேண்டும். அவையின் மரபும், மாட்சிமையும், மதிப்பும் காக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், அந்தப் பதவியை ஏற்றுள்ள தங்கள் இருவராலும் காப்பாற்றப்படும் என்னும் நம்பிக்கையை மீண்டும் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நன்றியுரை ஆற்றுவார்கள்.*

[*2026 மே 12*

மாண்புமிகு திரு. மு. ரவிசங்கர் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்த்த வயதில்லை. ஆகையால், உங்களை வணங்குகின்றேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் மாண்புமிகு முதல்வராக வீற்றிருக்கக்கூடிய கழகத்தினுடைய தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் அலுவலக நிர்வாகிகளுக்கும் தமிழக வெற்றிக் கழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையிலே என்னுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவை கண்ணியமாக நடத்தப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார்கள். கடந்த காலங்களைப்போல் இது இருக்காது. தமிழக சட்டமன்றத்தினுடைய மரபுகள் பேணிக்காக்கப்படும். அதேசமயத்தில் எங்களுடைய எல்லைகளைக் கடக்காமல் இந்தப் பேரவையை அமைதியாக நடத்திச் செல்ல நீங்களும் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றப் பேரவையில் வீற்றிருக்கக்கூடிய அனைத்து பேரவை பெருமக்களுக்கும் நன்றிகூறி, விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!’

என்று தமிழ்த்தாயை வணங்கித் தொடங்குகிறேன்.

மக்கள் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கிற போற்றுதலுக்குரிய, இந்திய திருநாடே வியப்பால் விழிகளை உயர்த்தி, தமிழ்நாட்டிலே இப்படியொரு முதலமைச்சரா என்று விழிகளைத் திறந்து போற்றிப் பாராட்டுகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், உடன் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

திரு. மு. ரவிசங்கர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும், பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நண்பர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூர்வீக இடத்தை திருச்சி மாவட்டமாகவும், பிறந்த இடத்தையும், பெண் கொண்ட இடத்தையும் திண்டுக்கல் மாவட்டமாகவும், வளர்ந்து ஆளாகிய இடத்தை திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த அம்பத்தூர் ஆகவும் கொண்ட எனக்கு ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, 15,141 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடையச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், ஆயிரம் விளக்கு தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

1980 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்க நான் முதன்முதலில் முதல்நாள் இந்த வளாகத்திற்கு வந்தபோது என் தகப்பனார் திரு. ஜான் சாமுவேல் அவர்களும், தாயார் திருமதி கமலம் சாமுவேல் அவர்களும், என் மூத்த அண்ணன்களான திரு. கிருபாகரன் அவர்களும், திரு. ஆரோக்கியராஜன் அவர்களும் இங்கே அமைந்துள்ள St. Mary's Church-க்கு அழைத்துச் சென்றார்கள். ஜெபம் செய்த பின்னர், என் பெற்றோர் "சிறிய வயதில் பெரிய பொறுப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. நல்ல பெயர் வாங்க வேண்டும். நம் வீட்டு வாசலில் நின்று நம்மை யாரும் கேள்வி கேட்கக் கூடாது. நீ பெரியவர்களை மதிக்க வேண்டும். தவறான வருவாய் எந்தக் காலத்திலும் வீட்டுக்குள் வரக் கூடாது. யாருடைய சாபத்திற்கும் நீ ஆளாகக் கூடாது" என்று அறிவுரை கூறி, நெற்றியில் சிலுவை அடையாளமிட்டு முதல் நாள் சட்டமன்றக் கூட்டத்திற்கு LKG பிள்ளையை பள்ளிக்கு அனுப்பி வைப்பதுபோல அனுப்பி வைத்த நாட்களை இன்று நான் நினைத்துக் கொண்டுதான் இந்த வளாகத்திற்குள்ளே வந்தேன். 38 ஆண்டுகளாக கண்ணின் இமைபோல என்னைக் காத்து, இந்த உயர்வான இடத்திற்கு நான் வர வேண்டுமென்று விரும்பிய என் துணைவியார் Grace Jayanthi Rani அவர்களை நான் நன்றியோடு நினைக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

பொதுவாழ்வில் என்னை வளர்த்து உருவாக்கி ஆளாக்கிய பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத்தான் உண்டு. இதே சட்டமன்ற வளாகத்தில் 1984 ஆம் ஆண்டு 'புகாரே இல்லாத சட்டமன்ற உறுப்பினராக உங்களைப் பார்க்கிறேன். யாரைக் கேட்டாலும் கண்ணியமானவர், நல்லவர் என்று சொல்கிறார்கள். இந்த நற்பெயரை எப்படி எடுக்க முடிந்தது' என்று புரட்சித் தலைவர் என்னிடம் கேட்டார்கள். 'சிறிய வயதில் என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கினீர்கள். உங்களுக்குக் கெட்ட பெயர் வரக் கூடாது என்று கவனமாக நடக்கிறேன்' என்று பதில் சொன்னேன். மிகவும் பாராட்டி, நடந்துகொண்டிருந்த சட்டமன்றப் பேரவையினுள் என்னை அனுப்பி வைத்தார்.

1978 ஆம் ஆண்டு அம்பத்தூர் நகரிய கவுன்சிலர், 1980 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர், 1984 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த 17 தொகுதிகளை உள்ளடக்கிய செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மாவட்டச் செயலாளர், 1985 ஆம் ஆண்டு முதல் அவர் மறையும் வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.ஜி.ஆர். இளைஞரணிச் செயலாளர் என பொறுப்பிலே அமர்த்தினார். அவர்தான் எனக்கு வாத்தியார். மனிதநேயம் உட்பட பல ஆளுமைப் பண்புகளை அவரிடம் நான் கற்றுக்கொண்டேன். எனக்கு ஒரு மகள் இருந்திருந்தால் நான் பிரபாகருக்குத்தான் கொடுத்திருப்பேன் என்று தமிழ்நாட்டில் முதல் முறையாகவும், கடைசி முறையாகவும் சொன்னவர். என்னை அவர் வீட்டுப் பிள்ளைபோல வளர்த்து உருவாக்கி, ஆளாக்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவுகளை இந்த நேரத்தில் நான் சுமக்கின்றேன். அவர் மறைவிற்குப் பிறகு, மறைந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்பையும், நம்பிக்கையையும் பெற்று அவரோடு பலமுறை நான் பயணித்திருக்கிறேன். பல முக்கிய முடிவுகள் எடுக்கின்ற கொள்கை முடிவுக் கூட்டங்களில் பங்கு பெற்றிருக்கிறேன். மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களோடு பொது வாழ்வுப் பயணம் தொடர்ந்தது. காங்கிரஸ் பேரியக்கத்தின் மாபெரும் தலைவரான அவர் தனி இயக்கம் கண்டபோது, அவரின் அரசியல் தனிச் செயலாளராகப் பணியாற்றினேன். 'எனக்குக் கிடைத்திருக்கிற மிகப் பெரிய சொத்து JCD பிரபாகர்' என்று பொது மேடையில் அவர் என்னைப் பாராட்டிப் பேசினார். மீண்டும், புரட்சித் தலைவி

2026 மே 12] *[பேரவைத் தலைவர்]*

அம்மா அவர்களின் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுபெரும் தலைவர் அவர்களை தேர்தல் நேரத்திலே எதிர்த்து 2011 ஆம் ஆண்டு வில்லிவாக்கம் தொகுதியில் வெற்றி பெறுகிற வாய்ப்பை இறைவன் எனக்கு அளித்தார். SIDCO-தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக மூன்று ஆண்டுகள் பணியாற்றினேன். 2013 ஆம் ஆண்டு அகில இந்திய செஸ் சம்மேளனத்தின் தலைவராக இருந்தபோது, இந்தியாவில் முதன்முறையாக உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியை சென்னையில் என்னுடைய முன்னிலையில் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 29 கோடி ரூபாய் நிதியளித்தார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தப் போட்டியை இந்தியாவில் முதன்முறையாக நடத்துவதற்குக் காரணமாக அமைந்த அந்த நிகழ்வு என் நெஞ்சத்தில் நீங்காமல் இருக்கின்றது.

முற்பகல் 10–50

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், கொளத்தூர் தொகுதியில் நான் வெற்றி வாய்ப்பை இழந்தபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காரை நிறுத்தி, என்னை அழைத்து, 'தேர்தல் பணியைச் சிறப்பாகச் செய்தீர்கள்; உங்கள் எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறது; எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்; நான் உங்களுடனே இருக்கிறேன்' என்று என்னிடம் கூறினார்கள். இதைச் சொல்லி என்னை உற்சாகப்படுத்திய நிகழ்வு என் நெஞ்சத்தில் நீங்காமல் இருக்கிறது.

கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்டதை அரசியல் புரட்சி என்றே சொல்லலாம். ஆம். தமிழக வெற்றிக் கழகம் ஒரு புதிய சக்தியாகப் பிரசவித்தது. மாற்றத்திற்கான மக்களின் விருப்பம், இளைஞர்களின் அரசியல் பங்கேற்பு, நல்லாட்சிக்கான எதிர்பார்ப்பு ஆகியவற்றின் வெளிப்பாடாக இந்த இயக்கம் வளர்ச்சிப் பெற்றது. இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள் மற்றும் சாதாரண மக்களின் எதிர்பார்ப்புகளை, சாதி, மதமற்ற சமூகத்தை உருவாக்க வேண்டிய கடப்பாட்டினை நிறைவேற்ற இவர் ஒருவரால் மட்டும்தான் இன்று முடியும் என்று நினைத்த மக்களின் உயிர்ப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் மறைவுக்குப் பிறகு சரியான ஒரு தலைமையைத் தேடி என் மனம் தவித்தது. மீண்டும், ஒரு எம்.ஜி.ஆர். நமக்குக் கிடைக்கமாட்டாரா என்று என் மனம் ஏங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏக்கத்தை, அந்தத் தவிப்பைப் போக்கிய மாபெரும் தலைவர்தான் நம் முன்னாலே அமர்ந்திருக்கின்ற வாழும் எம்.ஜி.ஆர்., மக்களின் மகத்தான தலைவராகப் பரிணமிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி விஜய் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் எனக்கு மட்டுமல்ல, நாட்டு மக்களின் குறைகளைத் தீர்க்கிற, கண்ணீரைத் துடைக்கிற, தமிழக மக்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய மாபெரும் சக்தியாகும். நீங்கள் எல்லோரும் இங்கு பாராட்டிப் பேசினீர்களே! வந்தார், எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் சந்தித்தார். ஒரு புதிய கோணத்தில் அவர் காட்டியிருக்கிற அரசியல் பண்பு இன்றைக்கு எல்லோராலும் பாராட்டப்படுகிறது என்று இந்த அவையிலே பாராட்டினீர்களே! இன்று காலையில், போதையில்லா தமிழகத்தை உருவாக்குவதில் நான் முனைப்போடு முன் நிற்கிறேன் என்று உலகத்திற்குக் காட்டியிருக்கிறாரே! (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரப் புகழ்மிக்க தலைவராக விளங்கும் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் என்னைப்போல எம்.ஜி.ஆர். ஆகத்தான் பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எளிதில் வெல்ல முடியாத தொகுதி ஆயிரம் விளக்கு தொகுதி என்று கருதப்பட்ட நேரத்தில், என்மீது நம்பிக்கை வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை போட்டியிட வைத்து, நேரில் வந்து பிரச்சாரம் செய்தார்கள். அவர் வந்ததால்தான் நான் வென்றேன். அவருக்காகத்தான் மக்கள் வாக்களித்தார்கள். அவர்தான் முதலமைச்சராக வர வேண்டுமென்று எனக்கு வாக்களித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக வெற்றிக் கழகத் தொண்டர்களைப்போல, கைமாறு கருதாமல் உழைக்கக்கூடிய, காசு, பணம் கேட்காமல் உழைக்கக்கூடிய, (மேசையைத் தட்டும் ஒலி) வெட்டி வா என்றால்

கட்டி வருகிற கட்டிளம் காளைகள் நிறைந்திருக்கக்கூடிய ஒரு வெற்றிக் கழகமாக இந்தக் கழகம் உங்கள் தலைமையை ஏற்று, தேர்தல் காலத்தில் அவர்கள் ஆற்றிய பணிகளை நான் உள்ளபடியே போற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசியல் வரலாற்றில் இந்தப் பொதுத் தேர்தல் மாபெரும் பல உண்மைகளை நமக்கு எடுத்துரைக்கிறது. தாங்கள் விரும்புகிற தலைவர் முதலமைச்சராக வர வேண்டுமென்று மக்கள் விரும்பினால், தலைவர் வாய்ப்பளித்த வேட்பாளர்களைத் தாங்கள் விரும்புகிற தலைவரின் உருவாகவே நினைத்து, சாதி, மதம், இனம், மொழி என பாராமல் வெற்றிபெறச் செய்வார்கள் தமிழக மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். மாமன்ற உறுப்பினர்களே! அலை வீசியது. அது விஜய் அலை; அது வெற்றி அலை; அது விசில் அலை! (மேசையைத் தட்டும் ஒலி)

காசு பணம் கொடுத்தால் ஓட்டு கிடைக்கும் என நினைத்து செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், அவற்றையெல்லாம் புறந்தள்ளி, மாசுமருவற்ற ஒரு தலைவனுக்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக மக்கள் களத்தில் குதித்ததைப் பார்க்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டத்திற்கு வலுக்கட்டாயமாக ஆள் சேர்த்து அனைத்துக் கட்சிகளும் செயல்பட்ட நேரத்தில், எங்கள் நெஞ்சம் நிறைந்த தலைவரைப் பார்த்துவிட வேண்டுமென்று சொந்தக் காசைச் செலவழித்து ஓடோடி வந்த மக்கள்தான், இறைவன் எங்கள் தலைவருக்கு அளித்திருக்கிற மாபெரும் அருட்கொடை. (மேசையைத் தட்டும் ஒலி)

சூழ்ச்சிகள், தந்திரங்கள், முட்டுக்கட்டைகள், தடைகள் ஏராளம். அவற்றையெல்லாம் தனி மனிதராகத் தாங்கிக்கொண்டு, ஆர்ப்பாட்டம் செய்யாமல், அலப்பறை செய்யாமல், பயந்து ஒதுங்காமல், அமைதி வழி நின்று ஓர் அமைதிப் புரட்சியை மாண்புமிகு புரட்சித் தளபதி விஜய் அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்று அறைகூவல் விடுத்தும், செவிசாயா நிலையில் இருந்த கட்சிகளின் எண்ணங்களையும், தொடர்ந்து சோர்ந்து போகச் செய்யும் வகையில் வந்த தேர்தல் கணிப்புகளையும் பொய்யாக்கி,

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

கூட்டணி இல்லாமல் தனி மனிதராக மக்களோடு மட்டும் கூட்டணி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாபெரும் வெற்றியை தமிழக வரலாற்றில் பெற்றுக் காட்டிய பெருமை தளபதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

தளபதி முதல்வர் அவர்களிடம் நாடும், நாட்டு மக்களும் நிறைய எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் கலங்கரை விளக்கமாக எதிர்பார்க்கிறார்கள். உங்களால் மட்டும்தான் அவர்களை உயர்த்த முடியும். உங்களால் மட்டும்தான் அவர்களை உயர்த்த முடியும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திற்கே தாங்கள் வழிகாட்டக்கூடிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை என்பது மக்களின் ஏகோபித்த குரல் ஒலிக்கும் உயரிய ஜனநாயக மன்றமாகும். சமூக நீதி, கல்வி வளர்ச்சி, மொழி உரிமை, மாநில முன்னேற்றம், தமிழகம் உயர்வடைய வகுக்கப்பட்ட பல திட்டங்களுக்கும், நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கும் அடிநாதமாக விளங்குகிறது. நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் வரலாற்றில் இடம்பெறச் செய்தது இந்த மாமன்றம். எவ்வளவு பெரிய மனிதர்கள் இந்த அவையை அலங்கரித்துள்ளனர்! ஆக்கபூர்வமான கருத்துகளால் தமிழகத்தை உயர்வடையச் செய்துள்ளனர்! இந்த அவைக்கு உள்ளே இருப்பதே மிகப் பெரிய பெருமை! அந்தப் பெருமையைப் பெற்ற பலரில் நானும் ஒருவனானேன் உங்களாலே! இன்றைக்கு என் அரசியல் வாழ்வில் பெரும் வைரக் கல்லாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பொறுப்பை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். எவ்வளவு பெரிய பதவி, நான் சிறியவன். உண்மையிலேயே கண்ணீர் வருகிறது. மிகப் பெரிய கௌரவத்தை எனக்கு வழங்கி, நம்முடைய தலைவர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைச் சிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஒருமனதாக என்னைத் தேர்வு செய்து, எனக்கு வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகப் பெரிய கௌரவத்தை பெற்றுள்ள இந்த மகிழ்ச்சிகரமான தருணத்தில் எனக்கு உறுதுணையாக நின்ற குடும்பத்தார் அனைவருக்கும்,

நண்பர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உயரிய பொறுப்பு வெறும் பதவி அல்ல; ஜனநாயகத்தின் மாண்பையும், மக்களின் நம்பிக்கையையும் பாதுகாக்கும் அரசமைப்புச் செயற்பாட்டுக்கு பொறுப்பாகும். இந்த நாற்காலியில் அமர்ந்தபின் நான் எந்தக் கட்சிக்கும் சார்பில்லாமல் முழு அவையின் தலைவராகச் செயல்படுவேன். ஆளும் தரப்பிற்கும், எதிர்க்கட்சிக்கும் சம வாய்ப்பும், உரிமையும் வழங்கப்படும். எதிர்கருத்துகளும் ஜனநாயகத்தின் வலிமை என்பதை மனதில்கொண்டு தரமான விவாதங்களுக்கு நான் ஊக்கம் அளிப்பேன். தமிழக மக்கள் நம்மை அரசியல் மோதலுக்காக அல்ல; மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உருவாக்குவதற்காக இவ்வவைக்கு அனுப்பியுள்ளனர். எனவே, நாம் அனைவரும் அவையின் மாண்பை பாதுகாப்போம்; தரமான விவாதங்களை வைப்போம். தனிப்பட்ட விமர்சனங்களைத் தவிர்ப்போம்; மக்கள் நலச் சட்டங்களை முன்னிலைப்படுத்துவோம். இந்த அவை இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்தது, திகழ வேண்டும் என்பதில் நாம் அனைவரும் ஒன்றாகப் பணியாற்ற வேண்டுமென்று அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்மொழி நமது அடையாளம் மட்டுமல்ல; அது நமது சிந்தனை மற்றும் பண்பாட்டு மரபின் உயிராகும். இந்த அவையில் தமிழ் மொழி மேலும் வளமுடன் பயன்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

> "சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
> வெல்லும்சொல் இன்மை அறிந்து"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, இந்த அவையில் பேசப்படும் ஒவ்வொரு சொல்லும் மக்களுக்குப் பயனளிக்கும் உயரிய சொல்லாக அமைதல் வேண்டும். அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

காகிதமில்லா சட்டமன்ற நடைமுறைகள், டிஜிட்டல் தகவல் பரிமாற்றம் மற்றும் தொழில்நுட்ப வசதிகள்மூலம் தமிழ்நாடு சட்டமன்றம் இந்தியாவில் தொழில்நுட்பத்திலும் முன்னணி சட்டமன்றமாகத் திகழ வேண்டும். நீண்ட அனுபவமிக்க பேரவை

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட சட்டமன்றப் பேரவைச் செயலக அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் இந்த அவையின் செயல்பாடுகளுக்கு வலுவான ஆதாரமாகத் தொடர்ந்து செயல்படுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். சட்டமன்ற நடவடிக்கைகளை மக்களிடம் கொண்டுசேர்க்கும் ஊடகங்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்க வகையில் அமையும் என என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, இந்த அவையின் உண்மையான எஜமானர்கள் மக்கள்தான். கிராமம் முதல் மாநகரம் வரை, விவசாயி முதல் தொழிலதிபர் வரை, இளையோர் முதல் முதியோர் வரை அனைத்து தரப்பினரின் நலனும் இந்த அவையின் சிந்தையாக அமைதல் வேண்டும்.

மக்களவையின் தந்தை என்று போற்றப்படும் திரு. கணேஷ் வாசுதேவ் மவ்லாங்கர் அவர்களைப் பற்றி மக்களவைச் செயலகம் 2018-ல் வெளியிட்டுள்ள ஒரு வெளியீட்டை, ஒரு குறிப்பை இங்கே நான் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். தமிழ்படுத்தி அதை நான் வாசிக்கின்றேன். தமிழிலே கூற வேண்டுமெனில், திரு. மவ்லாங்கர் அவர்களின் பங்கு அவையின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துபவராகவோ, எளிதாக்குபவராகவோ மட்டுமல்லாமல், இந்த நிலத்தின் கலாச்சாரம் மற்றும் நெறிமுறைகளுக்கேற்ற விதிகள், நடைமுறைகள், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களை நிறுவும் பொறுப்பைப் பெற்ற ஒரு ராஜதந்திரியாக, முன்னோடியாக மற்றும் நிறுவனத் தந்தையாக இருந்து, அவர் இதையெல்லாம் பொறுமை, விடாமுயற்சி, ஞானம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக வரலாற்று உணர்வுடன் நிறைவேற்றினார். அவர் அவையின் கண்ணியத்தை கடைப்பிடித்ததோடு மற்றவர்களையும் அதை கடைப்பிடிக்கச் செய்தார். உறுதியான, அதேசமயம் நெகிழ்வான, கண்டிப்பான, கனிவான மற்றும் அனுதாபம் கொண்ட அனைத்து பிரிவினர்களிடமும் அவையில் எப்போதும் நியாயமாக நடந்துகொள்ளும் ஒரு முன்மாதிரி சபாநாயகராக சந்தேகத்திற்கிடமின்றி அவர் இருந்தார். என்னுடைய விருப்பம் மற்றும் நோக்கம், திரு. கணேஷ் வாசுதேவ் மவ்லாங்கர் அவர்களைப்போல ஒரு முன்மாதிரி சட்டமன்றப் பேரவைத் தலைவராகச் செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட எண்ணற்ற அவைத் தலைவர்களைத்தான் இந்த மாமன்றம் பார்த்திருக்கிறது. அவர்களெல்லாம் நமக்கு, இன்றைக்கு எனக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். இன்னும்

சொல்லப்போனால், அவ்வாறு செயல்படுவது என்னுடைய பொறுப்பும், கடமையும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவியேற்பு விழாவில் கூறியதைப்போல, ஒரு புதிய துவக்கத்தை உருவாக்க வேண்டுமென்பதை மக்கள் உணர்த்துவதற்கான தீர்ப்புதான் கோடிக்கணக்கான மக்கள் இந்த முறை நமக்கு அளித்திருக்கிற ஒரு தீர்ப்பு.

முற்பகல் 11-00

"இலட்சியம் வெற்றிபெற வேண்டுமானால், அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கிவிட்டால் மட்டும் போதாது; அந்த இலட்சியத்திற்கு பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில், எவ்வளவு நியாயமான இலட்சியமும் பலத்துடன்கூடி இருந்தாலொழிய வெற்றிபெற முடியாது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் ஊழலற்ற ஆட்சியை, நேர்மையான ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற இலட்சியத்திற்கான நியாயத்தினை விளக்கி, அந்த இலட்சியம் பலத்துடன்கூடியதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மக்களோடு கூட்டணி அமைத்து, ஆற்றொணாத அடக்குமுறைகளையும், சொல்லொணா சூழ்ச்சிகளையும், சகிக்க முடியாத சதிகளையும், தாங்கிக்கொள்ள முடியாத துரோகத்தையும் தகர்த்தெறிந்து, வெற்றிக் கொடியை நாட்டி, எடுத்த எடுப்பிலேயே அரியாசனத்திலே அழுத்தமாக, வலிமையாக, கம்பீரமாக அரிமாபோல் வீற்றிருக்கிற வரலாற்று நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடம் சென்று, கவிதை எப்படி எழுதுவது என்று ஒருவர் கேட்டார். அதற்கு, "கவிதையை இயற்றுவதெல்லாம் முடியாதுப்பா; புல்லைப் பற்றி பாட வேண்டுமென்றால், புல்லோடு ஒன்றிணைந்துவிட வேண்டும்; அது சொல்வதை எழுதிக்கொள்ள வேண்டும்; அதுதான் கவிதை" என்றார் பாரதிதாசன். அதன் உள்ளர்த்தம் என்னவென்றால், புல்லைப் பற்றி பாட வேண்டுமென்றால், புல்லாக மாற வேண்டும்; அப்போதுதான் கவிதை பிறக்கும். இதுபோல, தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களோடு மக்களாக ஒன்றிணைந்துவிட்டார்கள்;

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

ஒன்றிணைந்து செயல்பட்டார்கள். மக்களின் மௌன வார்த்தைகளை, மக்களின் உணர்ச்சிகளை உணர்ந்து அதற்கேற்ப வாக்குறுதிகளை வழங்கினார்கள். அதுதான் இந்த மாபெரும் வெற்றியை அவருக்குப் பெற்றுத் தந்தது. போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே எம்.ஜி.ஆர். அவர்கள் வெற்றி பெற்றதால் 'புரட்சித் தலைவர்' என்று மக்களால் அழைக்கப்பட்டார். புரட்சித் தலைவர்போலவே, தாங்களும் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்றுள்ளதால் 'புரட்சித் தளபதி' என்று மக்களால் இன்றைக்கு நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனையைப் புரிய வேண்டுமென்றால், தலைமைப் பண்பு, துணிச்சல், நேர்மை மற்றும் ஈர்ப்பு சக்தி அவசியம். இந்தப் பண்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இயற்கையாகவே இறைவன் அளித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு போரைத் தலைமை தாங்கி நடத்துபவர்தான் தளபதி. தளபதி என்ற இலக்கணத்திற்கேற்ப, தமிழ்நாட்டில் நடைபெற்ற ஜனநாயகப் போரைத் தனியாகச் சந்தித்து, ஒரே ஆளாக எதிர்கொண்டு, இந்தச் சரித்திர சாதனையை தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் நீங்கள் படைத்திருக்கிறீர்கள். இதற்காக உங்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

சென்னை மாகாண ஆளுநராக இருந்த லார்டு வெலிங்டன் அவர்களும், அவருடைய மனைவி லேடி வெலிங்டன் அவர்களும் இணைந்து 6-3-1922 அன்று நடைபெற்ற விழாவிலே வழங்கிய நாற்காலிதான் நான் அமர்ந்திருக்கின்ற இந்த நாற்காலி. அந்த விழாவிலே பேசிய சென்னை மாகாண சட்டமன்றப் பிரதிநிதியும், இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், அரசியல் ராஜ தந்திரியுமான திவான் பகதூர் எம். ராமச்சந்திர ராவ் பண்டலு அவர்கள், "House of Commons தலைவர்களாக இருந்தவர்களெல்லாம், தாங்கள் பயன்படுத்திய நாற்காலியை தங்கள் பதவிக் காலத்தின் நிறைவாக எடுத்துச் செல்வது வழக்கம் என்றும், இந்த நடைமுறை 1832 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது" என்றும் தெரிவித்திருக்கிறார். இந்த ஜனநாயக நடைமுறையின்மூலம், புனிதமான, கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஒரு வரலாற்றுச் சின்னமாக இந்த நாற்காலி விளங்குகிறது. இப்படிப்பட்ட நாற்காலியில் அமரக்கூடிய வாய்ப்பை நீங்கள் தந்திருப்பது என்னைப் பெருமையடைய வைக்கிறது. இந்த நாற்காலியில் அமரக்கூடிய

வாய்ப்பு கிடைப்பவர்களெல்லாம் இந்த அவையின் கண்ணியம் மற்றும் பெருமையை மிக உயர்ந்த அளவில் நிலைநிறுத்த வேண்டுமென்று லார்டு வெலிங்டன் அவர்கள் குறிப்பிட்டதை நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தளபதி அவர்கள் எனக்கு இந்தப் பொறுப்பினை வழங்கியிருக்கிறார்கள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கேற்ப, "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இந்த அவையின் கண்ணியம் மற்றும் பெருமையை நிலைநிறுத்துவேன் என்பதை மெத்தப் பணிவன்போடு இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடுநிலைமைப் பற்றி இங்கே விரிவாக எடுத்துரைத்தார்கள். சான்றாண்மை மிக்க எதிர்க்கட்சித் தலைவர்களும் அதனை இங்கே வலியுறுத்தினார்கள். கயிற்றின் மேல் நடக்கும் வித்தைக்காரர் ஒருவரின் வெற்றிக்கு என்ன காரணம் என்று கேட்கப்பட்டது. ஒருவர் "கவனம்" என்றார், மற்றொருவர் "விழிப்புணர்வு" என்றார், இன்னொருவர் "பயிற்சி" என்றார். ஆனால், பயிற்சியாளரோ, இவை அனைத்தையும்விட முக்கியமானது "நடுநிலைமை" என்றார். இடது பக்கமோ, வலது பக்கமோ எந்தப் பக்கம் சாய்ந்தாலும் கயிற்றிலே நடப்பவர் விழுந்துவிடுவார் என்றாராம். இந்த அளவுக்கு சவாலான பணி சபாநாயகர் பணி. பகைவர் மீதான வெறுப்பு, நீதியை நிலைநிறுத்துவதிலிருந்து உங்களைத் தடுத்துவிடக் கூடாது என்கிறது திருக்குர்ஆன். ஏழை என்று அவனுக்கு பாரபட்சம் காட்டாமலும், பெரியவன் என்று முகதாட்சண்யம் பாராமலும் நியாயத் தீர்ப்பு செய்ய வேண்டும் என்கிறது பைபிள். நடுநிலைமை என்றால் சமத்துவம் என்கிறது பகவத்கீதை. ஆக, மூன்று மதங்களும் நடுநிலைமையை வலியுறுத்துகின்றன.

அவையில் காரசாரமான விவாதங்கள் நடக்கும்போது சபாநாயகர் மிகவும் பொறுமையுடனும், பாரபட்சமற்ற முறையிலும் சபையை வழிநடத்த வேண்டும் என்று நடுநிலைமைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். "Speaker, upon election should rise above party politics" என்கிறார் பண்டிட் ஜவஹர்லால் நேரு.

அதாவது, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராக சபாநாயகர் விளங்க வேண்டும். "The Speaker as a neutral, firm and indispensable authority necessary for maintaining parliamentary discipline and upholding democratic principles" என்கிறார் சட்ட மேதை அம்பேத்கர் அவர்கள். அதாவது, நாடாளுமன்ற ஒழுக்கத்தை பேணிக் காப்பதற்கும், ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கும் பாரபட்சமற்ற, உறுதியான மற்றும் முக்கியமான அதிகார மையமாக சபாநாயகர் விளங்க வேண்டும். சபாநாயகரின் பணி நடுநிலைமையாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக கட்சிக் கூட்டங்களுக்குச் செல்வதையே நிறுத்தியவர் மக்களவை முன்னாள் சபாநாயகர் மறைந்த தோழர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள்.

நீதிமன்றங்களிலே நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும்போது, நடைமுறையில் உள்ள சட்டங்களை அடிப்படையாக வைத்து தீர்ப்பு வழங்குகிறார்கள். ஆனால், அந்தச் சட்டங்களை இயற்றுகின்ற மாமன்றம் இந்தச் சட்டமன்றம். எனவே, இந்தச் சட்டமன்றப் பேரவைத் தலைவரின் முடிவு எந்தளவுக்கு பொறுப்பு வாய்ந்தது என்பதை அறிந்து செயல்பட வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். நடுநிலைமைப் பற்றி பேரறிஞர் அண்ணா, பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் அம்பேத்கர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., தோழர் சோம்நாத் சாட்டர்ஜி உள்ளிட்டவர்களின் கருத்துகளை மனதில் நிறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் இங்கே பேசிய கருத்துகளை மனதில்கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் மற்றும் மரபுகளுக்கு ஏற்ப நடுநிலைமையோடு செயல்பட்டு, இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பேன் என்ற உறுதியினை நான் இங்கே அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சிறிய கட்சிகளுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சபாநாயகர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவையில் சிறுபான்மையாக இருக்கும் எதிர்க்கட்சிகளின் குரல் ஒலிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியது அவரது கடமை என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

கேரளாவில் ஒரு திருவிழாவில் ஒரு யானையைக் கோயில் பிரகாரத்திலே அழைத்து வரும்போது, அந்த யானைக்கு இடப்பட்டிருந்த ஒரு பணி, கொடிக் கம்பத்தை தூக்கி நிறுத்த வேண்டும் என்பது. ஆனால், அந்த யானை கொடிக் கம்பத்திற்கு அருகிலே வந்ததும், கம்பத்தைத் தூக்கி நிறுத்தாமல் மறுத்துவிட்டது. என்ன காரணம் என்று ஆராய்ந்தார்கள். எந்தக் கொடிக் கம்பத்தை எந்தக் குழியில் நாட்ட வேண்டுமோ, அந்தக் குழிக்குள் ஒரு சிறிய பூனை உட்கார்ந்திருந்தது. அந்தக் கம்பத்தை நாட்டினால் பூனையின் உடல் நசுங்கிவிடும் என்பதற்காக, அந்த யானை பூனைக்காக பரிந்து, அந்தக் கம்பத்தை நாட்டவில்லை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது நினைவிற்கு வருகிறது. அதாவது, இந்த அளவில் எதிர்க்கட்சிகளையும், சிறிய கட்சிகளையும் ஆளுங்கட்சி நடத்த வேண்டுமென்பது இதன் உள்ளர்த்தம் ஆகும். பேரறிஞர் அண்ணா அவர்களின் உவமைக்கேற்ப, எதிர்க்கட்சி, சிறிய கட்சி மற்றும் சுயேட்சை உறுப்பினர்களின் உரிமைகள் காக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில், "அரசியலில் சொல்லித் தெரிந்துகொள்வது ஒன்றுமில்லை. எண்ணித்தான் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே அவையில் சொன்னதை நான் எடுத்துக் கூறவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த எண்ணிக்கை தமிழக வெற்றிக் கழகத்திடம் மிகுதியாக இருக்கிறது. மிக மிகுதியாக இருக்கிறது. இன்னும் மிகுதியாக ஆகும் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். எனவே, இந்த எண்ணிக்கை பலத்தையும் நான் கருத்தில்கொள்ள வேண்டும். இதுதான் ஜனநாயகம். பொதுவாக, கட்சிகளின் எண்ணிக்கைக்கேற்ப பேசுவதற்கான வாய்ப்பு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டாலும், புள்ளிவிவரங்களின் அடிப்படையில் எதிர்க்கட்சி, சிறிய கட்சி, ஓர் உறுப்பினர் மட்டுமே உள்ள கட்சி மற்றும் சுயேட்சை உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பு கடந்த காலங்களில் இந்த மாமன்றத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மரபு நிச்சயம் காக்கப்படும் என்ற உத்தரவாதத்தை நான் இங்கே அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தை சிறப்பாக நடத்திச் செல்ல வேண்டுமென்றால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களான உங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். எனவே, இந்த அவை சீரோடும், சிறப்போடும்

[பேரவைத் தலைவர்] [2026 மே 12

நடைபெற மாமன்ற உறுப்பினர்கள் தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

நான் வளர்கிறபோதே என் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டது மூன்றுதான் 'ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். உனக்கு செய்யத்தக்க திராணி இருக்கிறபோது, செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே! நீ உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல பிறரிடத்திலும் அன்பு கூறு' என்கிற அந்த வாசகங்கள்தான் என் நெஞ்சத்தைவிட்டு அன்றாடம் நீங்காது இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை இந்த அரியாசனத்திலே அமர்த்தியிருக்கிற, தமிழகமே விரும்பி ஏற்றிருக்கிற எதிர்காலத்தில் இந்திய துணைக் கண்டத்தையே வழிநடத்த இருக்கிற எங்களுடைய தளபதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் எதிர்பார்ப்பை, உங்கள் எண்ணத்தை, உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிற, அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகிற ஒரு நியாயமான, நீதி வழுவாத ஒரு பேரவைத் தலைவராக உறுதியாக நான் பணியாற்றுவேன் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தந்து, இந்த வாய்ப்பிற்கு வணங்கி, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13–5–2026), புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*****

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.